**ராஜாங்கனை பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ராஜாங்கனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் வருடத்தில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டத்தினதும் வாராந்த சந்தைக் கட்டிடத்தினதும் கிரயம ரூபா. 7,674,230 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கின் மீதி அத்தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் வருடத்தின் பொருள் மெய்மையாய்வு பரிந்துரைப்பின் பிரகாரம் ஏலவிற்பனைக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஐந்தாம் கட்டை வாராந்த சந்தை பழைய கட்டிடத்திலிருந்து கழற்றி ஒதுக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து ஒதுக்கப்படுவதற்குப் பதிலாக ஏலவிற்பனைப் பெறுமதியான ரூபா. 109,750 கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(இ) நிலையான சொத்தின் கீழ் குறிக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 1,106,177 பெறுமதியான 20 சொத்துக் கூறுகள் பல சந்தர்ப்பங்களில் அகற்றப்பட்டிருந்த போதும் அவ்வகற்றல்கள் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா. 28,500 பெறுமதியான 20 GI குழாய்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் ஆகியவற்றின் கீழ் இருமுறை பதியப்பட்டிருந்தமையின் காரணமாக நிலையான சொத்து மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானத்தினால் பங்களிப்புச் கணக்கு என்பன கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தன.

(உ) பொதுக் களஞ்சியக் கணக்கின் 2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா. 2,666,656 பெறுமதியான இருப்பு மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிருந்த போதும் அது செலவினமாகக் கருதப்படாமையினால் வருடத்தின் மிகை மற்றும் இருப்பு அத்தொகையினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2018 ஆம் ஆண்டிற்காகப் பெறப்பட்டிருந்த ரூபா. 153,694 பெறுமதியான வைப்புத் தொகையொன்று மீளாய்வாண்டில் கூலி வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தமை காரணமாக மேலதிகம் அத்தொகையினால் கூடுதலாகவும் மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு அத்தொகையினால் குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.

(எ) முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூபா. 14,106,147 நீதிமன்றத் தண்டப்பணம் மீளாய்வாண்டில் வருமானமாகக்

கருதப்பட்டிருந்தமையால் வருடத்தின் மேலதிகம் அத்தொகையிளால் கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஐ) வீதி வார திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூபா. 819,423 மீண்டெழும் செலவாக கணக்கிடப்பட்டிருந்தமையின் காரணமாக ஆண்டின் செலவினம் அத்தொகையினால் கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்தது. அச்செலவினம் உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் மீள் நிரப்ப வேண்டியிருந்த போதும் பெற வேண்டிய தொகையாக நிதிக் கூற்றுக்களில் காாண்பிக்கப்படாமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் அத்தொகையினால் குறைவாகக் காாண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) சபையின் கழிவறைத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காகச் செலவிடப்பட்டிருந்த தொகையான ரூபா. 615,932 மீண்டெழும் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தமை காரணமாக ஆண்டின் செலவினம் கூடுதலாகவும் நிலையான சொத்து மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கு அத்தொகையினால் குறைவாகவும் காாண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியன்று தொழிலாளர் பிணை வைப்புக்கள் கணக்கின் மீதி ரூபா. 43,154 ஆகவிருந்த போதும் அது ரூபா. 11,539 என குறிப்பிடப்பட்டமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா. 31,615 இனால் குறைவாகக் காாண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

சில வருடங்களுக்கு முன்பிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா. 2,374,837 கூட்டுத்தொகையான 08 பெற வேண்டிய கணக்கு மீதிகள் மற்றும் ரூபா. 1,720,536 கூட்டுத்தொகையான 07 செலுத்த வேண்டிய மீதிகள் ஆகியவற்றை தீர்வு செய்வதற்காக மீளாய்வாண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அம்மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விபரங்கள் சபையிடம் காணப்படவில்லை

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 72,857,904 தொகையான 03 கணக்கு விடயங்கள் திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) **1988 பிரதேச சபை (நிதி, நிர்வாக) விதிகள்** | | |
| (i) 174 ஆம் விதி | | திணைக்கள ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற வேலைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களிலே அந்தந்த தொகைகள் தொடர்பாக ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்கள் தொடர்பான பட்டியலொன்றோ விநியோகித்தல் ஆவணம் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 261.2.2 ஆம் விதி | 12,320 | பாலர் பாடசாலைகளுக்கான பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக பெறப்பட்டிருந்த ரூபா. 50,000 இல் ரூபா. 12,320 குறித்த பணிகளுக்குப் புறம்பான பணிகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணங்களை விதிப்பதற்கான 2016 ஆம் இலக்க 1993 11 ஆந் திகதிய வர்த்தமானிப் பத்திரம் | 512,150 | வியாபார வரியின் கீழ் வர்த்தமானியில் வெளியடப்படாத 253 வியாபாரங்களிலிருந்து வர்த்தமானியின் கட்டணங்களுக்கு இணங்காத வகையில் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,779,625 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,816,875 ஆகும்.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா. | ரூபா | ரூபா |
| அனுமதிப் பத்திரங்கள் | - | 79,000 | - | 79,000 | - |
| கடை வாடகை | 17,000 | 807,000 | 17,000 | 778,200 | 45,500 |
| கேள்வி வரி | - | 461,200 | - | 461,200 | - |
| சந்தை கட்டணங்கள் | - | 2,991,500 | - | 2,991,500 | - |
| வியாபார வரி | - | 568,000 | - | 568,000 | - |
| நிர்மாண வரி | - | 444,500 | - | 444,500 | - |
| சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் | - | 93,200 | - | 93,200 | - |
| மொத்தம் | 17,000 | 5,444,400 | 17,000 | 5,415,600 | 45,500 |

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 கடை வாடகை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(i) பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக இனங்காணப்பட்ட பிரதேசங்களிலிருந்து காணியின் பெறுமதி மதிப்பீடு செய்ப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 13,734,221 ஆக இருந்தது.

**2.2.3 முத்திரைக் கட்டணங்கள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமேல் மாகாண சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 1,080,462 ஆக இருந்தது.

**2.2.5 ஏனைய வருமானம்**

சபை அதிகாரப் பிதேசத்தில் அமைந்துள்ள அறிவித்தல் பதாகைகள் பதிவேடுகளுக்கு உட்படுத்தி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம்,பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான காரணங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வடமத்திய மாகாண சபையினால் 2016 மார்ச் 30 ஆந் திகதி வர்த்தமானி பத்திரத்தின் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்ட 1960/35 ஆம் இலக்க உப உறுப்புரையை ஏற்றுக்கொண்டுள்ளதாக 2017 திசெம்பர் 22 ஆந் திகதிய 2051 ஆம் இலக்க வர்த்தமானயின் மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அந்த உப விதி செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சபையினால் செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி**

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக மீளாய்வாண்டில் சபை அறிந்திராருந்ததுடன் அதில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 05 நிலையான சொத்து தலைப்புகளுக்குரிய அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொடர்பான குறிப்பிடப்பட்டுள்ள அளவு மற்றும் நிலையான சொத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு ஆகியவற்றுக்கிடையில் 25 சொத்துக் கூறுகளில் காணப்படும் வேறுபாட்டினை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏலத்தில் விடப்பட்ட மொத்தம் ரூபா. 41,350 பெறுமதியான 4 நிலையான சொத்துக் கூறுகள் குறித்த அட்டவணைகளிலிருந்து அகற்றப்படாது தொடர்ந்தும் முன்கொண்டு வரப்பட்டிருந்தன.

(இ) 1998 ஆம் ஆண்டிலிருந்து கைப்பற்றப்பட்டிருந்த மரத் தளபாட உபகரணங்கள் வெவ்வேறாக இனங்காணப்படும் வகையில் நிலையான சொத்து ஆவணங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கும் போது பாதீடு முறையான எதிர்வுகூறல் ஒன்றுடன் தயாரிக்கப்படாத காரணத்தினால் 05 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 33 சதவீதம் முதல் 1,147 சதவீதம் வரையான விலகலொன்றும் 06 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 32 சதவீதம் முதல் 308 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | | **குறைபாடுகள்** | |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | சரியாக பதிவேடுகள் பராமரிக்கப்படாமை. | |
| (ஆ) | இருப்புக்கள் | (i) | ஆண்டின் ஆரம்ப மீதி இனங்காணப்படாமை |
| | | (ii) | இனங்காணப்படாத மீதி காணப்படாமை |
| (இ) | கடன்பட்டோர் | (i) | அட்டணைகள் தயாரிக்கப்படாமை |
| | கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (ii) | காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |
| (ஈ) | செயற்திட்டங்கள் | போதியளவு மேற்பார்வை செய்யப்படாமை | |
| (உ) | கணக்கீடு | பொதுப் பேரேடு சமப்படுத்தப்படாமை. | |
| (ஊ) | நல்லாளுகை | (i) | உப விதிகள் பிறப்பிக்காமை |
| | | (ii) | வீத வரி அவீடு மேற்கொள்ளப்படாமை |
| | | (iii) | சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் மதிப்பிடப்பட்டு புதிய வாடகை அறவிடாமை |
| | | (iv) | அறிவித்தல் பதாகை பதிவேடு தயாரிக்கப்படாமை |
| | | (v) | அறிவித்தல் பதாகையிலிருந்து வருமானங்களை அறவிடாமை |